FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301609

1. District : திருப்பூர் PS: 24 க.க. மாத்து Year: 2026 FIR No.: 11 Date: 18.07.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended Act 2018. Sections பிரிவுகள்: Sec. 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: Sec. 106
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 17.07.26 நாள் முதல் 17.00 நாள் வரை 18.07.26 அதிகாலை மணி 01.00
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.07.26 நேரம் 13.30
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 60 கி.மீ. தூரம்.
Beat Number : (b) Address : உதவி செயற் பொறியாளர் அலுவலகம்,
முறைக் காவல் எண் முகவரி மேல் மலையனூர், திருப்பூர் மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. பரிதரன் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address : துணை ஆய்வு அலுவலர்
தொழில் முகவரி மேலாண்மை அலுவலகம்,
மேலாண்மை கட்டிடம், திருப்பூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திரு. ஜெயதேவ். த/பெ. சுப்பிரமணியன், உதவியாளர், உதவி செயற் பொறியாளர் அலுவலகம், மேல்மலையனூர், 2. திரு. ராமமூர்த்தி த/பெ. கிருஷ்ணன், கிராம நிர்வாக அலுவலர், தாதிரெட்டிபாளையம், 3. திரு. கார்த்திக், த/பெ. முத்து, கிராம நிர்வாக அலுவலர், சோளார் புரையூர், 4. திருமதி. உஷா த/பெ. பழனிச்சாமி, கிராம உதவியாளர், சத்தேரி, 5. திரு. ரமேஷ் த/பெ. முருகேசன், கிராம உதவியாளர், கப்பாரைப்பட்டு, 6. திரு. ராஜ் முருகன் த/பெ. ராமச்சந்திரன், ஒப்பந்ததாரர் அதேபகுதி ஆய்வாளர், 7. திரு. அருள்தாஸ் த/பெ. ராஜேந்திரன், நில அளவையர், மாவட்டம், 8. திரு. [illegible]

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் 9. திரு. பழனிவேல் த/பெ. வாலன், உதவியாளர், பாதாளபட்டி, 10. திரு. அலெக்சாண்டர் த/பெ. [illegible], மேல் மலையனூர், 11. திரு. மகாலிங்கம் த/பெ. [illegible], மேட்டூர் சாலை அருகேட்டம், திருப்பூர், 12. திரு. நாகராஜன் த/பெ. [illegible], மேட்டூர் சாலை புதிய மேல்மலையனூர், திருப்பூர்.

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

—

அய்யா,

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

18.07.26. 15.15 hrs.

Name: பெயர் .....
Rank: நிலை ..... No. எண் .....

பணிந்து அனுப்பப்படுகிறது. ஐயா, நான் இன்று 18.07.2026-ம் தேதி 13.30 மணியளவில், நிலைய அலுவலில் இருந்தபோது, கடலூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.P.ஸ்ரீதரன் என்பவர் 18.07.2026 இன்று நிலையடம வந்து கொடுத்த புகார் மனு மீது இன்று 18.07.2026-ம் தேதி 14.00 மணிக்கு, விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண் 11/2026/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. அனுப்புநர்: திரு.P.ஸ்ரீதரன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், கடலூர். பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம் மாவட்டம். ந.க.எண்.ஆகு1/388/2026, நாள் 18.07.2026 ஐயா, பொருள்: திடீர் ஆய்வு - விழுப்புரம் மாவட்டம் - விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் - 17.07.2026 அன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு மேற்கொண்டது - புகார் அளித்தல் - தொடர்பாக:- பார்வை: திடீர் ஆய்வு மகஜர் நாள்: 17.07.2026. P.ஸ்ரீதரன், துணை ஆய்வுக்குழு அலுவலர்,மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் ஆகிய நான் 17.07.2026-ம் தேதி எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா மாற்றம் செய்தல், கணினி திருத்தம், பிறப்பு, இறப்பு சான்று திருத்தம் செய்தல், மின் இணைப்பு தடையில்லா சான்று வழங்குதல், வருவாய் சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், வாரிசு சான்று வழங்குதல், புதிய குடும்ப அட்டை வழங்குதல் மற்றும் பெயர் சேர்த்தல் நீக்கல் செய்தல், முதியோர் உதவி தொகை வழங்குதல், ஈம சடங்கு உதவி தொகை வழங்குதல், முதலமைச்சர் பொது நிவாரணம் நிதி வழங்குதல், கனிமம் சுரங்கம் மண் எடுக்க அனுமதி வழங்குதல், கட்டிட சான்றிதழ் வழங்குதல்,இலவச வீட்டுமனை பட்டா வழங்குதல் போன்றவற்றிற்கு பதிவு செய்ய வரும் பொது மக்களிடம் இடைத்தரகர் மூலமாக இலஞ்சம் பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் நான் விழுப்புரம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவுக்கு சென்று அங்கு பணியில் இருந்த செல்வி.ஈஸ்வரி, காவல் ஆய்வாளர், விழுப்புரம் மாவட்டம் அவர்களிடம், மேல்மலையனூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தை திடீராய்வு செய்வது குறித்து கலந்தாலோசித்து அதன்படி நானும் மற்றும் காவல் குழுவினரும் உடனடியாக இரண்டு வாகனங்களில் புறப்பட்டு சுமார் 17.00 மணியளவில் மேல்மலையனூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்தடைந்தோம். மேற்படி மேல்மலையனூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகமானது, மேல்மலையனூர் ரோட்டில் உள்ள வள்ளலார் மடம் எதிரில் வடக்கு பார்த்த வாசற்படியுடன் கூடிய திசையில் அமைந்துள்ளது. அலுவலகம் தரைத் தளம் மற்றும் முதல் தளத்துடன் அமைந்துள்ளது. தரைத்தளத்தில் உள்ளே இடது பக்கத்தில் முதல் அறையானது

கணினி அறையாகும்.அந்த அறையில் 1. திரு.குமரவேல் உதவியாளர் என்பவர் பணியில் இருந்தார்.இந்த அறைக்கு பக்கத்தில் மண்டல துணை வட்டாட்சியர் அலுவலக அறை உள்ளது. இதில் உள்ள அறையில் போடப்பட்டிருந்த மேஜையின் முன் 2.திரு.ராமமூர்த்தி, தாழங்குணம் கிராம நிர்வாக அலவலர், 3.திரு.காளிதாஸ், கோவில்புரையூர் கிராம நிர்வாக அலுவலர் உட்கார்ந்திருந்தனர்.அதன் பக்கத்து அறையில் மேல்மலையனூர் வருவாய் வட்டாட்சியர் அறை இருந்ததது.அதில் 4. தட்டச்சர் திரு.துரை என்பவர் பணி செய்து கொண்டு இருந்தார்.மேற்படி அறைக்கு வெளியே உள்ள அறையில் வடக்கு பார்த்த திசையில் உள்ள மேஜைக்கு முன்பு 5.திரு பரந்தாமன், முதுநிலை வருவாய் ஆய்வாளர் அமர்ந்து பணிசெய்து கொண்டிருந்தார். அங்கு இருந்த அறையில் 6.செல்வி. சசிகலா, மக்கள் தொகை கணக்கெடுப்பாளர், 7.திருமதி. உதயா, கிராம உதவியாளர், 8.திருமதி. மகேஷ்வரி, மக்கள் தொகை கணக்கெடுப்பாளர் மேல்மலையனூர், 9.திரு. ராமதாஸ், கிராம உதவியாளர், கப்பலாம்பாடி, 10.திரு. கணபதி, முதுநிலை வரைவாளர், ஆகியோர்கள் பணிசெய்து கொண்டிருந்தனர். மேற்படி அலுவலக வாசலில் வலது பக்கம் ஆதார் கணினி அறை இருந்தது. அதில் 11. திருமதி. பொற்செல்வி, தட்டச்சர், தற்காலிக ஊழியர் பணியில் இருந்தார். அந்த அறைக்கு பக்கத்தில் மண்டல துணை வட்டாச்சியர் அறையும், அதன் பக்கத்தில் தனி வட்டாச்சியர்(ச.பா.தி) அறையில் 12. திரு. ராம்பிரசாத், முதுநிலை வருவாய் ஆய்வாளர் என்பவர் பணிசெய்து கொண்டிருந்தார். அதன் பக்கத்தில் தேர்தல் பிரிவு அறை இருந்தது. அதன் பக்கத்தில் வட்ட வழங்கல் பிரிவு அறை இருந்தது. மேற்படி அலுவலக அறைகளுக்கு எதிரே பெரிய அறை இருந்தது. அதில் 13. திரு.சக்திவேல், செஞ்சி என்கின்ற தனி நபர் ஒரு மேஜையின் முன்பு அமர்ந்து கணினியில் வேலை செய்து கொண்டிருந்தார்.தரை தளத்தில் இருந்த படிகட்டு வழியே முதல் தளத்திற்கு சென்று இடது பக்கத்தில் இருந்த நில அளவை பிரிவு அறையில் 14.திரு. ராம்குமார், முதுநிலை வருவாய் ஆய்வாளர், 15.திரு விஜயகுமார், சார் ஆய்வாளர் 16.திரு. சுதர்சன், நில அளவையர் ஆகியோர் அமர்ந்து பணிசெய்து கொண்டிருந்தனர். மேலும் 17. திரு.நரேந்திரன், கிராம நிர்வாக அலுவலர், மேல்செவளாம்பாடி, 18.திரு. சுப்பிரமணி, கிராம உதவியாளர், மேல்அருங்குணம், 19.திரு. லியோ, நில அளவை உதவியாளர், 20.திரு. சாமிவேல், வருவாய் ஆய்வாளர், சாத்தாம்பாடி கிராமம், 21.திரு. பிரசாந்த், இளநிலை உதவியாளர், 22.திருமதி. உமாமகேஷ்வரி, இ சேவை மையம் மேல்மலையனூர், 23. திருமதி. சசிகலா, வருவாய் ஆய்வாளர், அவலூர்பேட்டை, 24.திருமதி. நதியா, கிராம நிர்வாக அலுவலர், நாரண மங்களம், மற்றும் தனி நபரான 25. திரு.துரை முருகன் த.பெ. தருமன், சிறுதலை பூண்டி ஆகியோர்கள் இருந்தனர். மேற்படி தரைதள அலுவலகத்தில் இருந்தவர்களையும், முதல் தள அலுவலகத்தில் இருந்தவர்களையும் தரைத்தளத்தில் உள்ள பெரிய அறைக்கு அழைத்து வந்து அவர்களிடம்

எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களிடம் அலுவலகத்தை திடீராய்வு செய்யப்போவதாக தெரிவித்துவிட்டு பின்னர், அவர்கள் முன்னிலையில் எங்களை மீண்டும் சுய பரிசோதனை செய்த பின்பு மேற்படி அலுவலகத்தில் உள்ளவர்களையும், அலுவலகத்தையும் சோதனை செய்தபோது, பின்னர் எனது அறிவுறுத்தலின்படி காவல் குழுவினர் மேற்படி அலுவலகத்தையும், அங்கிருந்தவர்களையும் சோதனை செய்தபோது கீழ்கண்டவகையில் கணக்கில் வராத பணம் கைப்பற்றப்பட்டது.

திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத ரொக்கப் பணம் விவரம்:

1)திரு. குமரவேல், த/பெ.சுப்ரமணியன், உதவியாளர், வருவாய் வட்டாட்சியர் அலவலகம், மேல்மலையனூர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

2)திரு.துரை,த/பெ.நாரயணசாமி, தட்டச்சர் வருவாய் வட்டாட்சியர் அலவலகம், மேல்மலையனூர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

3) திரு.ராமமூர்த்தி, த/பெ.கண்ணன், கிராம நிர்வாக அலவலர், தாழங்குணம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.850/- (500X1, 100X3, 50X1)இருந்தது. அவர் வைத்திருந்த ஒன்வே பேக்கினை சோதனை செய்தபோது அதில் ரூபாய்.1,500/- (500X3,) இருந்தது. ஆக மொத்தம் ரூபாய்.2,350/- இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

4) திரு.காளிதாஸ் த/பெ.ஆரிமுத்து, கிராம நிர்வாக அலவலர், கோவில் புரையூர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.6,300/- (500X12, 200X1, 100X1)இருந்தது. அவர் வைத்திருந்த ஒன்வே பேக்கினை சோதனை செய்தபோது அதில் ரூபாய்.26,000/- (500X38, 200X25, 100X20) இருந்தது. ஆக மொத்தம் ரூபாய்.32,300/- இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

5) திரு.பரந்தாமன், த/பெ.பன்னீர் செல்வம், முதுநிலை வருவாய் ஆய்வாளர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

6) திருமதி.சசிகலா,க/பெ.முரளிகிருஷ்ணன், மக்கள் தொகை கணக்கெடுப்பாளர் ஒப்பந்த ஊழியர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

7) திருமதி.உதயா, க/பெ.பாக்கியராஜ், கிராம உதவியாளர், சித்தேரி என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.900/- (500X1, 100X4)இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

8) திருமதி.மகேஷ்வரி, க/பெ.முரளிதரன்,மக்கள்தொகை கணக்கெடுப்பாளர், மேல்மலையனூர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

9) திரு.ராமதாஸ்,த/பெ.ராமானுஜம், கிராம உதவியாளர்,கப்பலாம்பாடி என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.600/- (200X1, 100X4)இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

10) திரு.கணபதி,த/பெ.பன்னீர் செல்வம், முதுநிலை வரைவாளர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

11) திருமதி.பொற்செல்வி,க/பெ.பெருமாள்,தட்டச்சர்,ஒப்பந்த ஊழியர்(ஆதார் பிரிவு) அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

12) திரு.ராம்பிரசாத்,த/பெ.ராமசந்திரன்,முதுநிலை வருவாய் ஆய்வாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.1,500/- (200X1, 100X13) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

13) திரு.ராம்குமார்,த/பெ,மணி,வட்ட சார் ஆய்வாளா,மேல்மலையனூர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை

14) திரு.விஜயகுமார்,த/பெ.நாரயணசாமி,சார் ஆய்வாளர்,மேல்மலையனூர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை

15) திரு.சுதர்சன்,த/பெ.ராஜேந்திரன்,நில அளவையர்,சாத்தாம்பாடி என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.1000/- (500 X 2) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

16) திரு.நரேந்திரன் த/பெ.ராமமூர்த்தி, கிராம நிர்வாக அலவலர்,மேல்செவலாம்பாடி என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை

17) திரு.சுப்ரமணி, த/பெ.மாணிக்கம்,கிராம உதவியாளர், மேல்அருங்குணம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.800/- (100 x 8) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

18) திரு.லியோ, த/பெ.லூர்துசாமி,நில அளவை உதவியாளர்,மேல்மலையனூர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை

19) திரு.சாமிவேல்,த/பெ.ராமன், வருவாய் ஆய்வாளர், சாத்தான்பாடி என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.9000/- (500 x 11, 200 x 17,100 x 1) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

20) திரு.பிரசாந்த், த/பெ,டேவிட், இளநிலை உதவியாளர்,சிவில் சப்ளை, மேல்மலையனூர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை

21) திருமதி.உமாமகேஸ்வரி, க/பெ.பாஸ்கரன், இ சேவை மையம், மேல்மலையனூர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.1,600/- (500 x 1, 200 x 2,100 x 7) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

22) திருமதி.சசிகலா,த/பெ.ஏழமலை, வரவாய் ஆய்வாளர், அவலூர்பேட்டை என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை

23)திருமதி.நதியா,த/பெ.கண்ணன், கிராம நிர்வாக அலுவலர், நாராயணமங்கலம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை

24)திரு.சக்திவேல்,டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர், தனிநபர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.2,500/- (200 x 5,100 x 15) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

25) திரு.துரைமுருகன், த/பெ.தர்மன், மேட்டுதெரு, சிறுதலைபூண்டி, மேல்மலையனூர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.5,000/- (500 x 9, 200 x 2,100 x 1) இருந்தது.மேற்படி

தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

26) அதன் பின்பு, மேலும் மேல்மலையனூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தின் உட்புறத்தினை சோதனை செய்ததில், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் என்பவரின் மேசைக்கு பின்னால் ரூபாய்.1000/- (500 X 2) இருந்தது. மேற்படி தொகை குறித்து அங்கிருந்தவர்களிடம் கேட்க யாரும் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

39) மேலும் மேல்மலையனூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தின் இடதுபுறத்தில் உள்ள ஆதார் பிரிவு அறையினை சோதனை செய்ததில், திருமதி,பொற்செல்வி,தட்டச்சர், ஒப்பந்த ஊழியர் என்பவரின் மேசையின் மீது ரூபாய்.400/- (100 X1, 50 X 5, 20 X 2, 10 X 1) இருந்தது. மேற்படி தொகை குறித்து அங்கிருந்தவர்களிடம் கேட்க யாரும் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேல்மலையனூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தினை சோதனை செய்தபோது கைப்பற்றப்பட்ட பணமானது,

வ.எண்	கைப்பற்றப்பட்ட பணம்
1)	ரூ.2,350/-
2)	ரூ.32,300/-
3)	ரூ.900/-
4)	ரூ.600/-
5)	ரூ.1,500/-
6)	ரூ.1,000/-
7)	ரூ.800/-
8)	ரூ.9,000/-
9)	ரூ.1,600/-
10)	ரூ.2,500/-

11)	ரூ.5,000/-
12)	ரூ.1,000/-
13)	ரூ.400/-
ஆக மொத்தம்	**ரூ.58,950/-**

இந்த திடீராய்வின்போது, மேல்மலையனூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தினை சோதனை செய்தபோது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத தொகையான **ரூ.58,950/-**(ரூபாய் ஐம்பத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்)அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் இருந்து இலஞ்சமாக பெற்று வைக்கப்பட்டிருந்த பணமாக இருக்ககூடும் என விசாரணையில் தெரிய வருவதால் மேற்படி தொகையினை மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன்.

மேலும், மேல்மலையனூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலக வருவாய் ஆய்வாளர் திரு.சாமிவேல் என்பவரது G Pay phone number- 8675363758 என்ற எண் தொடர்புடைய SBI, செஞ்சி கிளை வங்கி கணக்கிற்கு 01.05.2026 முதல் 17.07.2026 வரையில் ரூபாய் 81,220/- அளவிற்கு பல்வேறு சந்தேக நபர்கள் மூலமாக பணபரிவர்த்தனை நடைபெற்றுள்ளது. அதுபோலவே, மேல்மலையனூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலக சார் ஆய்வாளர் திரு.விஜயகுமார் என்பவரது G Pay phone number- 9940956671 என்ற எண் தொடர்புடைய இந்தியன் வங்கி கிளை, ஆசனூர் வங்கி கணக்கிற்கு 01.05.2026 முதல் 17.07.2026 வரையில் 99,350/- அளவிற்கு பல்வேறு சந்தேக நபர்கள் மூலமாக பணபரிவர்த்தனை நடைபெற்றுள்ளது. அதுபோலவே, மேல்மலையனூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலக முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.பரந்தாமன் என்பவரது G Pay phone number- 9677664992 என்ற எண் தொடர்புடைய இந்தியன் வங்கி, மேல்மலையனூர் கிளை வங்கி கணக்கிற்கு 01.05.2026 முதல் 17.07.2026 வரையில் 2,87,100/-அளவிற்கு பல்வேறு சந்தேக நபர்கள் மூலமாக பணபரிவர்த்தனை நடைபெற்றுள்ளது. அதுபோலவே, மேல்மலையனூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலக முதுநிலை வரைவாளர் திரு.கணபதி என்பவரது G Pay phone number- 9047669030 என்ற எண் தொடர்புடைய இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, செஞ்சி கிளை வங்கி கணக்கிற்கு 01.05.2026 முதல் 17.07.2026 வரையில் 79,850/- அளவிற்கு பல்வேறு சந்தேக நபர்கள் மூலமாக பணபரிவர்த்தனை நடைபெற்றுள்ளது.

மேற்படி நபர்களின் G pay மூலம் இலஞ்ச பணமாக அலுவலக பணியாளர்களின் வங்கி கணக்கிற்கு செலுத்தப்பட்டுள்ளது என விசாரணையில் தெரிய வருகிறது. மேலும், இவ்வலவலக

பணியாளர்களின் G pay மூலமான பண வரவினை பார்க்கும்போது இடைத்தரகர்களிடம் இலஞ்சமாக பல லட்ச ரூபாய் அளவிற்கு பணம் பெற்றுள்ளது விசாரணையில் தெரிய வருகிறது.

மேற்படி மேல்மலையனூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்த பதிவேடுகளான வருகை பதிவேடு-2026, அலுவலக பணி பதிவேடு-2026, காலதாமத வருகை பதிவேடு-2026, ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

பிறகு அலுவலகத்தில் இருந்த உதவியாளர், அலுவலக பணியாளர்கள் மற்றும் அலுவலகத்தினுள் இருந்தவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீராய்வின்போது அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு தொடர்பாக பொதுமக்கள் புகார்கள் தெரிவிக்க வேண்டிய ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்தின் விபரம் அலுவலகத்தில் வைக்கப்படவில்லை. மேல்மலையனூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்தவர்கள் அனைவரும் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். அலுவலக பெண் ஊழியர்கள் பெண் காவலர் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டார்கள். மேலும் அலுவலக உடமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் விழுப்புரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் நான் சொல்ல ஆய்வாளர் செல்வி.ந.ஈஸ்வரி என்பவரால் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர் இன்று 17.07.2026-ம் தேதி சுமார் 17.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 18.07.2026-ம் தேதி அதிகாலை சுமார் 01.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீர் ஆய்வு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட இலஞ்ச தொகை மற்றும் விழுப்புரம் இணை சார்பதிவாளர்-1 அலுவலகத்தில் கண்டெடுக்கப்பட்ட கணக்கில் வராத தொகையாக **ரூ.58,950/-** (ரூபாய் ஐம்பத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக சம்மந்தப்பட்ட அலுவலர்களான 1.திரு.குமரவேல், த/பெ.சுப்ரமணியன், உதவியாளர், வருவாய் வட்டாட்சியர் அலவலகம், மேல்மலையனூர், 2.திரு.ராமமூர்த்தி, த/பெ.கண்ணன், கிராம நிர்வாக அலவலர், தாழங்குணம், 3. திரு.காளிதாஸ் த/பெ.ஆரிமுத்து, கிராம நிர்வாக அலவலர், கோவில் புரையூர், 4. திருமதி.உதயா, க/பெ.பாக்கியராஜ், கிராம உதவியாளர், சித்தேரி, 5.திரு.ராமதாஸ்,த/பெ.ராமானுஜம், கிராம உதவியாளர், கப்பலாம்பாடி, 6.திரு.ராம்பிரசாத், த/பெ.ராமசந்திரன், முதுநிலை வருவாய் ஆய்வாளர், 7.திரு.சுதர்சன், த/பெ.ராஜேந்திரன், நில அளவையர்,சாத்தாம்பாடி, 8. திரு.சுப்ரமணி, த/பெ.மாணிக்கம்,கிராம உதவியாளர், மேல்அருங்குணம், 9.திரு.சாமிவேல்,த/பெ.ராமன், வருவாய் ஆய்வாளர், சாத்தான்பாடி,

10.திருமதி.உமாமகேஸ்வரி,க/பெ.பாஸ்கரன்,இ சேவை மையம், மேல்மலையனூர்,11.திரு.சக்திவேல், டேட்டா என்ட்ரிஆப்ரேட்டர்,தனிநபர்,12. திரு.துரைமுருகன், த/பெ.தர்மன், மேட்டுதெரு, சிறுதலைபூண்டி, மேல்மலையனூர், தனிநபர் ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள sd xxxxxxx (P.Sridharan) துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், கடலூர்.இணைப்பு:1.திடீர் ஆய்வு மகஜர் நாள்.17.07.2026. 2. ரொக்கம் ரூ.58,950/- 3. 25 நபர்களின் வாக்குமூலங்கள், 4. மேல்மலையனூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலக வருகை பதிவேடு-2026, 5.அலுவலக பணி பதிவேடு-2026, 6. காலதாமத வருகை பதிவேடு-2026,

ஐயா,

இன்று 18.07.2026-ஆம் தேதி காலை 14.00 மணிக்கு மேற்படி புகார் மனு மீது, விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 11/2026/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS-ன்படி வழக்கு பதிவு செய்து கொண்டேன். ஒப்பம்.xxxx (ந.ஈஸ்வரி) காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம்.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அசல் புகார் மனு மற்றும் இரு துறை திடீர் கூட்டுசோதனையின் செயல்முறை ஆகியவற்றை மாண்புமிகு மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி ஊழல் தடுப்பு வழக்குகள் நீதிமன்றம், விழுப்புரம் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிக்கொள்ளப்பட்டது.

18.07.26